**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 12.08.2025</u>**

**OS.224/2019**

**வா.சா.3 திரு.தங்கவேல்**

**வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். வழக்கு சொத்து யாருடையது என்றால் கிருஷ்ணமூர்த்தி என்பவருடையது. கிருஷ்ணமூர்த்திக்கு எப்படி பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது. சிகாமணி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அக்கா பேரன். சிகாமணியின் அப்பா சாமிக்கண்ணு எனது அக்கா மகன் என்றால் சரிதான். சிகாமணி சாமிகண்ணுவின் ஒரே மகன் என்றால் சரிதான். சாமிகண்ணுவும், சிகாமணியும் ஒரே குடும்பமாக தான் இருந்தார்களா என்றால் ஆமாம், ஒரே குடும்பமாக தான் இருந்தார்கள். சாமிகண்ணுவிடம் இருந்து அவரது மகன் சிகாமணி ரூபாய் ஐந்து லட்சத்திற்கு கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை. (சாட்சி மீண்டும் அவ்வாறு கிரையம் வாங்கினாரா இல்லையா என்று எனக்கு தெரியாது என்று கூறுகிறார்.)

2. தாவா சொத்து குறித்து சாமிகண்ணுவும், சிகாமணியும் விலை ஏதாவது பேசினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் செய்ததாக நான் சொல்லும் நிலத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் 8 வருடம் ஆகிவிட்டது அது எனக்கு தெரியவில்லை. அந்த சொத்திற்கு 4 பக்கம் யார் நிலம் உள்ளது, செக்குபந்தி தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா

சொத்திற்கு சேர்ந்தார்போல் சிகாமணிக்கு சொந்தமான கடை உள்ளது என்றால் சரிதான். அந்த கடை நிலம் மட்டும் தான் கிருஷ்ணமூர்த்திக்கு பாத்தியப்பட்டு அது சாமிகண்ணுக்கு பொதுஅதிகார பத்திரம் எழுதி கொடுத்து பின்னிட்டு அந்த சொத்தை சிகாமணி பெயரில் கிரையம் செய்து வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வழக்கு சொத்தானது கிருஷ்ணமூர்த்திக்கு பாத்தியம் இல்லை, அவ்வாறு பாத்தியம் இல்லாத சொத்தை குறித்து மோசடியாக பொது அதிகார பத்திரம் தயார் செய்து ஏற்கனவே கடை பகுதியை கிரையம் செய்து கொடுத்து பல ஆண்டுகள் கழித்து இந்த தாவா சொத்தை மோசடியாக கிரைய பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 இலட்சத்திற்கு கிரையம் பெற்று சுவாதீனம் சிகாமணி அடைந்ததாக சொல்லியுள்ளேன் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. அடுத்தவர்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தான் சாமிகண்ணு தாவா சொத்தை குறித்து கிரைய பத்திரத்தை தயார் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கும், சிகாமணிக்கும் எந்த விதமான பாத்தியமும் இல்லை, சிகாமணி எனது அக்கா பேரன் என்பதற்காக அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.12 18:56:35 +0530